2016 ஆகஸ்ட் 31]

123—

மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

***297—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தண்டலம் ஊராட்சி, தண்டலம் மேட்டுக் காலனியில் வீடுகளுக்கு மேல் செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நாள், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 100-வது நாள். வாக்களித்த வாக்காளப் பெருமக்களின் விரல்களிலுள்ள மை அழிவதற்கு முன்பாக (மேசையைத் தட்டும் ஒலி) தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்த தலைவர், எங்களது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தேர்தல் நேரத்திலே, எத்தனையோ ஊடகங்கள் என்னென்னவோ செய்திகளை வெளியிட்டாலும்கூட, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற தாரக மந்திரத்தின்மூலம், இன்றையதினம் 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து ஆறாவது முறையாக முதல்வராகப் பதவியேற்று, இன்று 100 நாட்களை கடக்கின்ற சூழ்நிலையில், எங்களது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்த வயதில்லை என்றாலும், வணங்குகிறேன். இந்த சட்டமன்றப் பேரவையில் மூன்று முறை எனக்கும் வாய்ப்பளித்து, இரண்டாவது முறையாக என்னை அமைச்சராக்கிய எங்களது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்டலம் ஊராட்சி, தண்டலம் மேட்டுக்காலனியில் வீடுகளுக்கு மேல் செல்லும் மின் கம்பிகளை மாற்றி அமைத்துத்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். பொதுவாக, அந்தந்த

ஊராட்சியிலே இருக்கின்ற ஊராட்சி மன்றங்கள் அதற்குண்டான தொகையை மின்சார வாரியத்திற்குக் கட்ட வேண்டும். இல்லையென்றால், நுகர்வோர் அந்தத் தொகையைக் கட்ட வேண்டும். அப்பொழுதுதான் மின்சார வாரியத்திலிருந்து அந்த மின் கம்பிகளை மாற்றித் தர முடியும். ஆக, உள்ளாட்சித் துறையின் சார்பாகவோ அல்லது நுகர்வோர் சார்பாகவோ, அதற்குண்டான பணத்தைக் கட்ட தயாராக இருக்கிறார்கள் என்றால், உடனடியாக மின் கம்பிகளை மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமையை ஒழிப்பதே தன்னுடைய வாழ்நாள் கனவு என்று, ஆதி திராவிட மக்கள் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்திலே உயர வேண்டுமென்று அடுக்கடுக்கான திட்டங்கள் தந்து, இந்தியத் தேசத் தலைவர்களின் இலட்சியங்களை மட்டுமல்ல, உலகத் தலைவர்களின் இலட்சியங்களையும் நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாவது முறையாக அரியணையில் அமர்ந்து, நூறாண்டு சாதனைகள் செய்து, 100-வது நாளைக் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட, தண்டலம் ஊராட்சியிலே, ஆதி திராவிடர் வாழ்கின்ற மேட்டுக் காலனியில் அவர்களுடைய குடிசைகளுக்கும் மற்றும் அரசு வழங்கிய தொகுப்பு வீடுகளுக்கும் மேலே விவசாய pumpset-களுக்கு செல்கின்ற மின் கம்பிகள் செல்வதால், அந்தக் குடிசைகளில் வாழ்கின்ற மக்களெல்லாம் தினந்தோறும் அச்சத்தோடு வாழ்ந்து வருகிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி நிருவாகமோ அல்லது நுகர்வோரோ பணம் செலுத்துகின்றபட்சத்திலே, அந்த மின்

2016 ஆகஸ்ட் 31]

கம்பிகளை மாற்றியமைக்க வழிவகை உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின் கம்பிகளை மாற்றியமைப்பதற்கு மின் துறை அதிகாரிகளிடத்திலே கேட்டதற்கு 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மின் துறைக்கு பணம் செலுத்த வேண்டும் என்கிறார்கள். அந்த ஓலைக் குடிசையிலே, அரசு தொகுப்பு வீடுகளிலே வாழ்கின்ற ஆதி திராவிட மக்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் அந்தப் பணத்தைச் செலுத்தக்கூடிய சூழ்நிலையில் இல்லை. உள்ளாட்சியிலே கேட்கின்றபொழுது நிதியில்லை என்று சொல்கிறார்கள். கேட்கின்ற திட்டங்களை மட்டுமல்ல, கேட்காத திட்டங்களையெல்லாம் ஆதி திராவிட மக்களுக்கு அள்ளி தருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் மாண்புமிகு அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று உள்ளாட்சியிலே அதற்கான ஒரு நிதி ஆதாரத்தை ஏற்படுத்தி, சிறப்பு அனுமதி பெற்று, அந்த மின் கம்பிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதியில் ஏற்கெனவே 20 ஆண்டுக் காலமாக அந்த மின் கம்பி செல்கின்றது. அதற்குப் பின்னால்தான் அவர்கள் அங்கே வீட்டைக் கட்டி குடியிருந்து வருகின்றார்கள். பொதுவாக ஒரு பகுதியிலே வீடு கட்டுகின்றபோது, மேலே, உயர் அழுத்த மின் கம்பி சென்றாலும் சரி, தாழ்வழுத்த மின் கம்பி சென்றாலும் சரி, அந்தப் பகுதியிலே வீடு கட்டுகின்றபொழுது அவர்கள் அந்தக் கம்பி செல்கின்ற பகுதியை விட்டு விட்டு, மற்ற இடத்தில் கட்ட வேண்டும். அப்படியில்லாமல் கட்டிவிட்டு, மீண்டும் எங்களிடத்திலே வந்து நீங்கள் உடனே மாற்றிக் கொடுங்கள் என்று சொல்கின்றபொழுது மின்சார வாரியத்தினுடைய நிலைமை தர்மசங்கடமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், அவர் சொல்லியதுபோல ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதி. அவர்கள் கட்டுகின்றபொழுதே, அந்த*

இடத்தை விட்டுக் கட்டியிருந்தால் இந்தப் பிரச்சினை இருந்திருக்காது. இருந்தாலும், 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் கட்டணம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இன்றைய தினம் காலையில் அதிகாரிகளிடம் பேசி, அதை 5 ஆயிரம் ரூபாயாகக் குறைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்திலும் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உள்ளாட்சித் துறை மூலமாக அந்தப் பணத்தைச் செலுத்தி, அதை மாற்றித் தருவதற்குண்டான நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி, அந்தக் குடிசையிலே, தொகுப்பு வீடுகளில் வாழ்கின்ற மக்களுக்கு மின் இணைப்பு கோருகின்றபொழுது, மேலே செல்கின்ற அந்த மின் கம்பிகளைக் காரணம் காட்டி, இதுவரை அந்தக் குடிசை வீடுகளுக்கும் அரசு தொகுப்பு வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படாமல் இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த தொகுப்பு வீடுகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து தெரிவது என்னவென்றால், மின் கம்பிகள் மேலே செல்கின்ற அந்த இடத்திலே புதியதாக* connection *கொடுக்கின்றபொழுது அந்தக் குடிசைகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினால் மறுக்கப்பட்டிருக்கும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு*

2016 ஆகஸ்ட் 31]

அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உள்ளாட்சித் துறையின் வாயிலாக அந்தப் பணத்தைக் கட்டியதற்குப் பின்னால், மின் கம்பிகளை உடனடியாக மாற்றி, தொகுப்பு வீடுகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

சமுதாயக் கூடம்

***189—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வடுவூர் வடபாதி ஊராட்சி, கொண்டையூரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்தத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் 100 ஆவது நாள். 32 ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கத்தின் தொடர் ஆட்சியாக அமைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின் 100 ஆவது நாள். 6 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று எண்ணற்ற திட்டங்களை நாட்டு மக்களுக்காகத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்*